# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 0928/2016/பே**

ஆணை எண்: 188 /2017

நாள்: 19/07/2017

திரு. எஸ். இசக்கி முத்து,
த/பெ. சுப்பையா ஆசாரி,
கீழத்தெரு, வடக்கூர்,
**ஆரல்வாய்மொழி,**
**கன்னியாகுமரி மாவட்டம் –629 301.** — **முறையீட்டு மனுதாரர்**

பேரூராட்சித் துணைத்தலைவர்,
**ஆரல்வாய்மொழி பேரூராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம்.** — **எதிர் மனுதாரர்**

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி பேரூராட்சி திரு. எஸ். இசக்கிமுத்து த/பெ திரு. சுப்பையா ஆசாரி, கீழத்தெரு, வடக்கூர் ஆரல்வாய்மொழி என்பவரின் நாளில்லாத முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.09.2016 அன்று பெறப்பட்டு 928/16 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி கிராமம், கீழத்தெரு, வடக்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. எஸ். இசக்கிமுத்து, த/பெ. சுப்பையா ஆசாரி என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் துப்புறவு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் பேரூராட்சி மன்றத் துணைத்தலைவராக செயல்படும்

திரு. பி. பொன்பாண்டியன் எடுத்துள்ளார் எனவும் இவர் கடந்த 4 ஆண்டுகளாக மேற்படி துப்புறவு பணிகளை செய்து வருவதாகவும் இதற்காக மாதம் ரூ.1,20,000/- பெற்று வருவதாகவும் பேரூராட்சி பதவியில் இருக்கும் எவரும் தேர்தல் நடத்தை விதிகளின்படி எந்தவிதமான குத்தகையோ ஒப்பந்தமோ செய்யக் கூடாது. ஆனால், பொதிகை ஆண்கள் சுய உதவிக்குழு என்ற பெயரில் திரு பி. பொன்பாண்டியன் வேலையை எடுத்து செய்கிறார் எனவும், மேலும் மேற்படி பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவிற்கு திரு பி. பொன்பாண்டியன் குழுத் தலைவராக இருந்து கொண்டு துப்புறவு பணிகளுக்கு சரியான வேலை ஆட்களை அமர்த்தாமல் போலியாக பட்டியல் தயாரித்தது குறித்து துணைத் தலைவர் திரு பி. பொன்பாண்டியன் மற்றும் திரு. எல். சண்முகவேல் 12வது வார்டு உறுப்பினர் ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து பதவியினை பறிமுதல் செய்யவும் வீணாக செலவிடப்பட்ட தொகையினை உரியவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டுமென தனது புகார் மனுவில் கோரியுள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவம் கடித எண்.928/2016/பே நாள்:10.11.2016-ன் மூலம் ஆரல்வாய்மொழி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை அளித்திட ஆணையிடப்பட்டது.

ஆரல்வாய்மொழி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண்.828/2016/அ1/நாள்: 29.11.2016ல் கீழ்கண்டவாறு விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

ஆரல்வாய்மொழி பேரூராட்சி 28.54 ச.கிமீ உள்ள பகுதியாகவும் இப்பேரூராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கி 22,846 மக்கட்தொகையினை கொண்டதாகவும் உள்ளது எனவும் இப்பேரூராட்சியில் 68 கி.மீ நீளம் சாலை பகுதியும் 22 குடியிருப்புகள் மற்றும் 105 தெருக்களையும் உள்ளடக்கியதாக இருப்பதாலும், இப்பேரூராட்சியின் துப்புறவு பணியினை மேற்கொள்ள போதுமான துப்புறவு பணியாளர்கள் இல்லாத நிலையில் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 275/நாள்:17.09.2012 மற்றும் 313/09.11.2012ன்படி பேரூராட்சியின் துப்புறவு பணிகளை செய்ய பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவினை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்கள் சுய உதவிக் குழுவிற்கு தலைவராக ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் துணைத் தலைவராக உள்ள திரு. பி. பொன்பாண்டியன் என்பவர் 01.09.2016 முடிய இருந்துள்ளார் எனவும், இக்குழுவின் செயலராக இப்பேரூராட்சியின் 12வது வார்டு உறுப்பினரான திரு. எல். சண்முகவேல் என்பவரும் இதே காலத்தில் இருந்துள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அமைப்பின் கடித எண்.928/2016/பே/நாள்: 17.02.2017ன்படி மேற்படி பொதிகை ஆண்கள் சுய உதவிக்குழுவிற்கு 2012 முதல் 2017ம் ஆண்டு வரை சுகாதாரபணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கிய கோப்பினை பரிசீலனைக்கு அனுப்பிவைக்க கோரப்பட்டதில் மேற்படி செயல் அலுவலர் ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவினை பணியமர்த்திய கோப்பின் ஒளி நகல்கள் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டதில் பின் வரும் விவரங்கள் தெரியவந்துள்ளன.

1. ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் தீர்மானம் எண்.275/17.09.2012 ன்படி இப்பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள குப்பைகளை அள்ள போதிய அளவிலான ஆட்கள் இல்லை என்பதை கருத்தில் கொண்டு இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்கள் மூலம் 1 முதல் 18 வார்டுகளில் உள்ள வீடுகள்தோறும் குப்பைகளை வாங்குவதற்கும் எஞ்சிய நேரங்களில் பொது சுகாதாரப்பணிகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. இதனை தொடர்ந்து ஆரல்வாய்மொழி தேர்வு நிலை பேரூராட்சி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடித எண்.284/அ1/நாள்:17.09.2016ன் மூலம் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.
3. இதன் அடிப்படையில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவினை தேர்வு செய்து 01.10.2012 முதல் 30.09.2013 முடிய உள்ள காலத்திற்கு சுகாதார பணிகளை மேற்கொள்ள பணி ஆணை ந.க.எண்.அ1/284/2012/நாள்: 28.09.2012ன் மூலம் வழ ங்கப்பட்டுள்ளது.
4. இதனை தொடர்ந்து ஏற்கனவே உள்ள தீர்மானத்தின்படி 01.10.2013 முதல் 30.09.2014வரை உள்ள காலத்திற்கு 24.09.2013ம் தேதியிலும், 01.10.2014 முதல் 30.09.2017 முடிய உள்ள காலத்திற்கு 24.09.2014ம் தேதியிலும், பணி ஆணை பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.இம்முறைமன்ற நடுவ அமைப்பு கடித எண்.928/2016/பே நாள்:31.03.2017ன்படி பேரூராட்சி செயல் அலுவலர், ஆரல்வாய்மொழி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 27.04.2017 அன்று நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க கோரப்பட்டதை தொடர்ந்து இப்பேரூராட்சியின் செயல்

அலுவலரான திருமதி. த. கமலேஸ்வரி த/பெ. திரு. தங்கைய்யா அவர்கள் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார் தான் மேற்படி ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் 20.01.2016 முதல் பணியாற்றி வருவதாகவும் திரு. இசக்கிமுத்து அவர்களின் புகார் மனுவின்படி ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் துணைத் தலைவரான திரு. பி. பொன்பாண்டியன் என்பவர் கடந்த நான்கு ஆண்டுகளாக துப்புறவு பணிகளை செய்து வருகிறார் எனவும் பதவியில் இருப்பவர்கள் பேரூராட்சியில் ஒப்பந்தமோ, குத்தகையோ செய்யக்கூடாது என்ற விதிகளை மீறி பேரூராட்சியின் துணைத் தலைவர் திரு. பி. பொன்பாண்டியன் மற்றும் திரு. எல். சண்முகவேல் 12 வது வார்டு உறுப்பினர் ஆகியோர் இந்த ஒப்பந்த பணிகளை செய்து வருகிறார்கள் எனவும் தான் இது குறித்து 29.11.2016ல் அறிக்கை சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 5030/2008/அ4/நாள்:24.06.2008ன்படி பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை குறித்தும் பேரூராட்சிகளின் தனியார் மூலம் பணிகளை செயல்படுத்துதல் குறித்தும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டதாகவும் பேரூராட்சியில் துப்புறவு பணியாளர்கள் எண்ணிக்கை பற்றாக்குறை காரணமாக மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பங்களிக்காத பேரூராட்சியில் மட்டுமே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தனியார் மூலம் பணிகள் செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இப்பேரூராட்சியில் பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழுவிற்கு இந்த துப்புறவு பணி வழங்கப்பட்டதாகவும், இப்பணியினை மேற்கொள்ள எந்த மகளிர் சுய உதவிக் குழுவும் எந்த தொண்டு நிறுவனமும் முன்வராத நிலையில் பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழு மட்டும் முன் வந்ததால் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தினக்கூலி அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்ததின் அடிப்படையில் ரூ.275/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதிகை ஆண்கள் சுய உதவிக் குழு குறைந்தபட்ச மாக ரூ.270/-ம் குறிஞ்சி ஆண்கள் சுய உதவிக் குழுவினர் ரூ.300/- கோரி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் வழங்கியதில் ரூ.270/-க்கு ஒப்புக்கொண்ட ஆண்கள் சுய உதவிக்குழுவிற்கு பணி வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பந்தபுள்ளிகளில் உள்ள ஒரே விதமான கையெழுத்து குறித்தும்

17.09.2012 ல் இயற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் தனக்கு எதுவும் தெரியாது எனவும் அப்போது பணியில் இருந்த திரு. ராமசாமி பிள்ளை என்பவர் பணியிலிருந்து ஓய்வு பெற்று தற்போது நாகர்கோவிலில் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இந்த துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் குழுவின் பொறுப்பாளர்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட ஆதாயம் எதுவும் இல்லை எனவும் மேற்படி குழுவின் பெயருக்கே இப்பணிக்கான தொகை வழங்கப்படுவதாகவும் சுய உதவிக்குழுவின் அனைத்து நடவடிக்கைகளும் முறையாக இந்த குழுவிலும் நடைபெறுகிறது எனவும் மனுவில் குறிப்பிடடுள்ள திரு. பொன்பாண்டியன் மற்றும் திரு எல்.சண்முகவேல் எனபவரும் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான பலனும் பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதாக தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து முன்னாள் செயல் அலுவலர் திரு. இராமசாமி பிள்ளை அவர்களின் நேரடி வாக்கு மூலம் பெற இம்முறைமன்ற நடுவம் கடித எண் 928/2016/பே/நாள 15.05.2017ன் முலம் இவரிடம் பெறப்படவேண்டிய வாக்குமூலம் 18.05.2017 முற்பகல் 11.00 மணிக்கு நாகர்கோவில் சுற்றுலா மாளிகையில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு அழைப்பாணை அனுப்பபட்டது. இதன்படி மேற்படி திரு. ராமசாமி பிள்ளை என்பவர் 18.05.2017ல் நாகர்கோவிலில் நேரடியாக ஆஜராகி அளித்த வாக்குமூலம் விவரம்.

தான் மேற்படி ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் 06.06.2012 முதல் 26.10.2012 முடிய கூடுதல் பொறுப்பு வகித்ததாகவும் அந்த சமயத்தில் மேற்படி பேரூராட்சியின் தலைவராக திருமதி பத்மாவதி என்பவர் இருந்ததாகவும் திரு. பி.பொன்பாண்டியன் என்பவர் பேரூராட்சி மன்றத்தின் துணைத் தலைவராக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சியின் துப்புரவு பணிகளை பேரூராட்சியின் நிரந்தரபணியாளர்கள் செய்து வந்ததாகவும் திடக்கழிவு மேலாண்மை பேரூராட்சியில் புகுத்தப்பட்டதால் கூடுதலாக பணியாளர்களை நியமனம் செய்தல் குறித்து பேரூராட்சியில் மன்றப் பொருள் வைத்ததாகவும் இதற்கான பொருள் எண் 65/நாள் 17.09.2012 இப்பொருள் மீது 1 முதல் 18 வார்டுகளில் வீடுதோறும் குப்பைகளை வாங்குவதற்கும் எஞ்சிய நேரத்தில் சுகாதார பணிகளை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டு தீர்மான எண்.275ல் இயற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சுயஉதவிக் குழுக்களிடமிருந்து விருப்ப விண்ணப்பங்கள் கோரி அலுவலக

விளம்பர பலகையில் 17.09.2012ல் அறிவிப்பு செய்யப்பட்டதாகவும் 01.10.2012 முதல் 30.09.2013 வரை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 சுய உதவிக் குழுக்கள் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பித்தனர். 27.02.2012 ல் பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக் குழுக்கள், குறிஞ்சி கிராம முன்னேற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகிய இரு குழுக்களும் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டார்கள் எனவும் பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக்குழு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.270/- என்ற விகிதத்திலும், குறிஞ்சி கிராம முன்னேற்ற மகளிர் சுய உதவிக்குழு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.300/- எனவும் ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டிருந்தார்கள் என்பதால் குறைவான தொகை குறிப்பிட்டுள்ள (ரூ.270/-) பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக்குழுவிற்கு இந்த ஒப்பந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கென மன்ற முன் அனுமதி 28.09.2012ல் பேரூராட்சி தலைவரிடம் பெறப்பட்டதாகவும் பின் 09.11.2012 பேரூராட்சியின் சாதாரணக்கூட்டத்தில் பொருள் எண்.41 ஆகவும் தீர்மானம் எண் 313ல் 2012 முதல் 2017 முடிய 5 ஆண்டுகளுக்கு பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக்குழுவிற்கு இந்த பணிகளை மேற்கொள்வதற்கு தீர்மானம் வைக்கப்பட்டது எனவும் முன் அனுமதி வழங்கும்போது மட்டும் தான் பேரூராட்சியில் பணி புரிந்ததாகவும் 17.09.2012ல் முன் அனுமதி பெறும்போது சுய உதவிக்குழுவினுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை எனவும் 28.09.2012ல் 2012-13ம் ஆண்டிற்கு பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக்குழு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.270/- என்ற விகிதம் வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கும் முன் அனுமதி வழங்கப்பட்டது இதற்கு பிறகு 28.09.2012ல் 01.10.2012 முதல் 30.09.2013 முடிய உள்ள காலத்திற்கு பணி உத்திரவு தன்னால் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் மேற்படி ஆரல்வாய்மொழி பேரூராட்சியில் திரு. ஞானசேகரன் என்பவர் செயல் அலுவலராக பணியேற்றார் எனவும் பொதிகை ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக்குழுவில் பேரூராட்சியின் துணைத்தலைவர் திரு பொன் பாண்டியன், தலைவராகவும் 12வது வார்டு உறுப்பினர் திரு சண்முகவேல் செயலாளராகவும், திரு நாகராஜன், பேரூராட்சி துணைத்தலைவருடைய மைத்துனர் பொருளாளராகவும் மேலும் 13 நபர்கள் சுய உதவிக்குழுவில் பணிபுரிந்து வந்தார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட 13 நபர்களில் பேரூராட்சியினுடைய தலைவர் பெயரோ, துணைத் தலைவர் திரு. பொன்பாண்டியன் பெயரோ அவரின் மைத்துனர் பெயரோ இல்லை எனவும் ஒவ்வொரு மாதமும் காசோலை சம்பந்தப்பட்ட குழுவினருக்கு வழங்கப்பட்டதாகவும் தீர்மான எண்.313/ நாள்:09.11.2012ல், 2017ம் ஆண்டு வரை சம்பந்தப்பட்ட சுய உதவிக்குழுவிற்கு பணி வழங்குவதாக பொருள் வைக்கப்படவில்லை. ஆனால் தீர்மானத்தில் 5 ஆண்டுகளுக்கென நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் , 17.09.2012ல் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு செய்த நிபந்தனை எண் 10ல் நிபந்தனைகளாக 01.10.2012 முதல் 30.09.2013 வரை என்று குறிப்பிட்டுள்ளதாகவும் மன்றத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் 5 ஆண்டுகளுக்குமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஒரு மாதத்திற்கு ரூ.85,000/– முதல் ரூ.95,000/– வரை செலவினம் இருக்கும் எனவும் ஆண்டிற்கு குறைந்தது ரூ.9,60,000/– எனவும் ஐந்தாண்டுகளுக்கு ரூ.48,00,000/– எனவும் தெரிவித்து இந்த மன்ற தீர்மானம் 30.09.2017 என திரு வி.ஞானசேகரன் காலத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும் இப்பேரூராட்சியில் 05.11.2012 முதல் 03.12.2012 வரை திரு க.அம்புரோஸ் 04.12.2012 முதல் 03.02.2013 வரை செல்வி பெர்சி ரேணுகாதங்கம்மாள் என்பவரும் 04.02.2013 முதல் 14.07.2013 வரை திரு. சாமுவேல் துரைராஜ் என்பவரும் 15.07.2013 முதல் 19.01.2014 முடிய திரு ஜா.முகம்மது இக்பால்ஷெரீப், 20.01.2014 முதல் 13.01.2015 வரை திரு த.கமலேஸ்வரி என்வரும் 14.01.2016 முதல் 02.02.2016 முடிய திருமதி க.செண்பகவல்லி மற்றும் 03.02.2016 முதல் தொடர்ந்து திருமதி த. கமலேஸ்வரியும் செயல் அலுவலர்களாக பணிபுரிந்துள்ளனர் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனு, ஆரல்வாய்மொழி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவற்றினை பரிசீலித்ததில் 17.09.2012ம் நாள் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.275ல் சுய உதவிக்குழுக்கள் மூலம் சுகதார பணியினை மேற்கொள்ள தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதே தவிர இத்தீர்மானத்தில் கால கெடு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

இத்தீர்மானத்தினை தொடர்ந்து அறிவிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு எந்தெந்த சுய உதவிகுழுக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்ற விவரமும் குறிப்பிடப்படவில்லை. மேலும் அந்த ஒப்பந்த அறிக்கையில் ஓராண்டுக்கு மட்டுமே கால கெடு நிர்ணயம் செய்து ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேலும், ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் முன்னாள் செயல்

அலுவலர் திரு. ராமசாமி பிள்ளை தனது வாக்குமூலத்தில் மேற்படி சுய உதவிக்குழுவின் தலைவராக திரு. பி. பொன்பாண்டியன் பேரூராட்சியின் துணைத் தலைவர் மற்றும் திரு. எல். சண்முகவேல் 12 வது வார்டு உறுப்பினர் செயலாளராக இருப்பது தனக்கு அளிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெறவில்லை என குறிப்பிட்டிருப்பது ஏற்க இயலாத ஒன்றாக உள்ளது. சுய உதவிக் குழுக்களில் தலைவர், செயலர் மற்றும் பொருளாளர் பதவிகளில் இருப்பவர் போக மீதம் ஒரு குழுவில் குறைந்தபட்சம் 12 அங்கத்தினர்கள் இருக்கவேண்டும் என்பது விதி. இதனை மேற்படி செயல் அலுவலர் பொருட்படுத்தாமல் மேற்படி உள்ளாட்சி பிரதிநிதிகள் இக்குழுவில் இருப்பது தனக்கு தெரியாது என தெரிவித்ததின் அடிப்படையில் இவர் இப்பணியினை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கும் நோக்கில் செயல்பட்டிருப்பது இவரின் விளக்கத்தின் மூலமே புலனாகிறது. மேலும் பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளி உறைகளும் ஒரே விதமான கையொப்பத்தில் இருந்ததையும் மேற்படி செயல் அலுவலர் கவனிக்கத் தவறியுள்ளது புலனாகிறது. பேரூராட்சியின் துணைத் தலைவர் ஆண்கள் சுய உதவிக்குழுவின் தலைவராக இருந்த நிலையில் இக்குழுவின் மாதாந்திர ஆய்வுக்கூட்ட அறிக்கைக்கான ஆவணங்களை பணி உத்திரவு வழங்கிய செயல் அலுவலரோ அல்லது அதற்கு பின்னர் பொறுப்பேற்ற செயல் அலுவலர்களோ ஆய்வு மேற்கொண்டிருந்தால் இச்செயல் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

இவருக்கு பின்னர் வந்த செயல் அலுவலர்களும் இப்பொருள் குறித்து எந்தவிதமான ஆய்வும் மேற்கொள்ளாமல் இருந்ததை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. ஒரு உள்ளாட்சி பொறுப்பில் உள்ள நபர், ஒப்பந்தம் மற்றும் சுய உதவிக்குழுவின் மூலம் அரசாங்க பணத்தை அனுபவிக்கக்கூடாது என்ற அடிப்படை விதிகூட தெரியாத நிலையில் ஒரு செயல் அலுவலர் உள்ளது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்றாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் தற்போதைய செயல் அலுவலர் தெரிவித்தவாறு மாவட்ட ஆட்சியரின் குறைந்த பட்ச கூலித்தொகையினை விட குறைவாக உள்ள தொகையின் அடிப்படையிலேயே 2012ம் ஆண்டில் ஒப்பந்தபுள்ளித் தொகை அனுமதித்தாக தெரிவித்துள்ள நிலையில் அதற்கு அடுத்த ஆண்டுகளில் எந்த அடிப்படையில் தொகை வழங்கப்பட்டது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவ விசாரணயின்போது எந்த செயல் அலுவலரும் தெரிவிக்கவில்லை.ஓராண்டிற்கு மட்டுமே ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதாவது 01.10.2012 முதல் 30.09.2013 வரையிலான காலத்திற்கே ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஓராண்டு முடிந்தபின்பும் மீண்டும் ஒப்பந்தபுள்ளி கோராமல் தொடர்ந்து பணி வழங்கப்பட்டுள்ளது சட்டத்திற்கு புறம்பானது

ஆகும். எனவே 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டப் பிரிவு 50 (d )ன்படி நிறுவனமொன்றில் இயக்குனராக இல்லாத பிற பங்குடைமையர் நீங்கலாக, அல்லது இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு தவிர நகராட்சி அதனுடன் செய்து கொள்ளப்பட்டு தற்போது இருந்து வருகிற ஒப்பந்தம் எதிலும், அல்லது அந்நகராட்சிக்காக செய்யப்படும் பணி எதிலும் உரிமை நலன் எதனையும் பெறுபவராயின் அத்தகைய தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தகுதியின்மை (disqualification) கொண்டவராவார். எனவே மேற்படி சட்டக்கூறுகளுக்கு முரணாக பேரூராட்சியில் துணைத் தலைவர் மற்றும் 12 வது வார்டு உறுப்பினர் ஆகியோர் பொறுப்பாளர்களாக இருந்த ஒரு ஆண்கள் கிராம முன்னேற்ற சுய உதவிக் குழுவிற்கு சுகதாரப் பணிகளை வழங்கியது மற்றும் ஒராண்டிற்கு மட்டுமே ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு மீண்டும் காலம் முடிந்தவுடன் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோராமல் ஏற்கனவே பணி வழங்கப்பட்டவர்களுக்கே தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக பணி வழங்கியமைக்கும் பொறுப்பான அலுவலர்கள் மீது விளக்கங்கள் பெற்று துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 24/7/17

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குனர்,
   குறளகம், சென்னை.

2. திரு. எஸ்.இசக்கி முத்து
   த/பெ. சுப்பைய்யா ஆசாரி
   கீழத்தெரு, வடக்கூர்
   ஆரல்வாய்மொழி,
   கன்னியாகுமரி மாவட்டம் – 629 301.

3. செயல் அலுவலர்,
   ஆரல்வாய்மொழி பேரூராட்சி,